## சுருக்கம்

தூத்துக்குடி நகராட்சி – தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை மேம்படுத்தும் திட்டம் – முதல் கட்டப் பணிக்கான நிதிப் பங்கீட்டிற்கு (Funding Pattern) ஒப்புதல் வழங்குதல் மற்றும் முதல் கட்டப் பணியை ரூ.608.30 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (இருபதாண்டு) எண்.110 நாள்: 01.08.2008

படிக்க:

1) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.37778/2008/P2 நாள் 9.07.2008
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.37778/2008/P2 நாள் 30.07.2008
3) அரசாணை (இருபதாண்டு) எண். 109 / நநி(ம)குவ(நநி6)துறை நாள் 01.08.2008

ஆணை:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 2008-2009 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது பின்வருமாறு அறிவித்தார்:-

தூத்துக்குடி நகரில் அமைந்துள்ள "பக்கிள் ஓடையை மேம்படுத்தும் பணி" 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டங்களாக எடுத்து செயல்படுத்தப்படும்.

2. மேற்குறித்த அறிவிப்பு தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் முதலாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் (TNUIFSL) நியமிக்கப்பட்ட கலந்தாலோசகர் (Consultant) விரிவான திட்ட அறிக்கையை ரூ.29.96 கோடி மதிப்பீட்டில் தயார் செய்ததாகவும், மேற்படி விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகத்தால் (TNUIFSL) மதிப்பீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி திட்டம் மானியங்கள் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் (TNUIFSL) இதற்கு மாற்றாக பக்கிள் ஓடையில் நிலச் சீராக்கம் செய்யப்படும் நிலத்தை வணிக உபயோகத்திற்கு பயன்படுத்தலாம் எனவும் அல்லது பொது மற்றும் தனியார் கூட்டுமுயற்சி (Private Public Partnership) மாடலுக்கு உபயோகப்படுத்துவதன் மூலமாக இத்திட்டத்திற்கான வருவாயை ஈட்டலாம்

எனவும் தெரிவித்து, நகராட்சி நிர்வாக ஆணையர் தூத்துக்குடி நகராட்சியில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை சீரமைக்கும் பணியினை மூன்று கட்டங்களாக ரூ.20.06 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் கோரியிருந்தார்.

3. இந்நேர்வு தொடர்பாக தூத்துக்குடி நகர் மன்றம் தனது 18.07.2008-ம் தேதிய 414 ஆம் எண் தீர்மானத்தில் பக்கிள் ஓடையை சீரமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் (TNUIFSL) மூலம் KFW திட்டத்தில் கடன் உதவி பெற்று அதற்குரிய நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்த நிர்வாக அனுமதி பெற தீர்மானம் இயற்றியுள்ளது.

4. மேற்கண்ட சூழ்நிலையில், இக்கருத்துரு தொடர்பாக முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் (TNUIFSL) ஆகியோருடன் ஆலோசனை செய்து, அதனடிப்படையில் சில மாற்றங்களுடன் கூடிய திருத்திய கருத்துருவை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் முதலாம் கட்டப் பணியை ரூ.698.30 இலட்சங்கள் செலவில் பின்வருமாறு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

| | பணிகள் | | தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1 | கால்வாய் படுகையை முழுமையும் தூர்வாருதல், கால்வாய் ஓரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் உட்பட | | ரூ.20.00 |
| 2 | 4.80 கி.மீ. முதல் 6.60 கி.மீ. வரை கால்வாய் வாய்ப்புகளில் RCC ஷீட் அமைத்தல் (கால்வாய் முடிவு வரை) | | ரூ.506.00 |
| 3 | தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பாலங்கள், குறுக்குப் பாலங்கள் அமைத்தல் | | ரூ.40.00 |
| 4 | கால்வாயை ஒட்டியுள்ள நடைபாதையிலும் தெருவிளக்குகள் அமைத்தல் | | ரூ. 67.00 |
| | மொத்தம் | | ரூ.633.00 இலட்சங்கள் |
| | எதிர்பாராச் செலவினம் | 2.5% | 15.83 |
| | எதிர்பாரா விலையேற்றம் | 5% | 32.44 |
| | மேற்பார்வைச் செலவுகள் | 2.5% | 17.03 |
| | மொத்தம் | | ரூ. 698.30 இலட்சங்கள் |

மேற்குறித்த முதலாம் கட்ட பணிகளுக்கான நிதிப் பங்கீடு தொடர்பான பரிந்துரையை பின்வருமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அளித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| முதலாம் கட்டப் பணிகளுக்கான திட்டச் செலவு | | ரூ.698.30 இலட்சங்கள் |
| | நிதியாதாரங்கள் | |
| 1 | கேளிக்கை வரி இழப்பீடு நிதி | ரூ.400 இலட்சங்கள் |
| 2 | ஒரு முறை வழங்கப்படும் சிறப்பு மானியம் | ரூ.200 இலட்சங்கள் |
| 3 | உள்ளாட்சி அமைப்பின் பங்கு | ரூ.98.30 இலட்சங்கள் |
| | மொத்தம் | ரூ.698.30 இலட்சங்கள் |

6) மேற்காணும் சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர் கீழ்க்காணும் இனங்கள் மீது ஒப்புதல் அளிக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

அ) பக்கிள் ஓடையை மேம்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்,

ஆ) இத்திட்டத்தினை மூன்று கட்டங்களாக (three phases ) செயல்படுத்துதல்,

இ) மேலே பத்தி 5இல் குறிப்பிட்டுள்ள நிதிப் பங்கீட்டிற்கு (Funding Pattern) ஒப்புதல் வழங்குதல்

ஈ) முதல் கட்டப் பணியினை ரூ.698.30 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளவும், மற்றும் நிர்வாக ஒப்புதல் அளித்தல்.

7. எனவே மேலே பத்தி 6 ல் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்த பின், தூத்துக்குடி நகராட்சியில் அமைந்துள்ள பக்கிள் ஓடையை மேம்படுத்தும் திட்டத்தினை மூன்று கட்டங்களாக (three phases ) செயல்படுத்த ஒப்புதல் அளித்தும், கேளிக்கை வரி இழப்பீட்டு நிதி/ உள்கட்டமைப்பு ஈடு செய் நிதி (Infrastructure Gap Fund) ரூ.400 இலட்சங்கள், ஒரு முறை வழங்கப்படும் சிறப்பு மானியம் ரூ.200 இலட்சங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பங்கு ரூ.98.30 இலட்சங்கள் ஆக மொத்தம் ரூ.698.30 இலட்சங்களைக் கொண்ட நிதிப் பங்கீட்டிற்கு (Funding Pattern) ஒப்புதல் வழங்கியும், இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியினை மட்டும் ரூ.698.30 இலட்சங்கள் (ரூபாய் அறுநூற்று தொண்ணூற்று எட்டு இலட்சத்து முப்பதாயிரம்) செலவில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம்.
மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ (TUFIDCO), சென்னை

நகராட்சி ஆணையாளர், தூத்துக்குடி நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்.
(நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.வழியாக)
சம்பளக்கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை 600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை 600 018.(பெயர் உறையில்)
உள்துறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம்,தலைமைச் செயலகம், சென்னை 600 009.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் (ம)குடிநீர் வழங்கல் (அமுமு2/மாமு6 பிரிவுகள்)துறை
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

1/8/08

பிரிவு அலுவலர்.

1-8-08